செ.வெ.எண்: 32/அக்டோபர் நாள் : 28.10.2020

**இராமநாதபுரம் மாவட்டம்**

**தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு கடனுதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 27.10.2020 அன்று தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் பயனாளிகளுக்கு ரூ.13.50 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசு உலக வங்கி நிதி உதவியுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் மூலம் தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம் ஊரக தொழில்களை மேம்படுத்துதல், வேலைவாய்ப்பு மற்றும் நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வருமானத்தை பெருக்குதல் என்ற நோக்கத்தை அடிப்படையாக கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடானை, ஆர்.எஸ்.மங்கலம், திருப்புல்லாணி மற்றும் மண்டபம் ஆகிய நான்கு வட்டாரங்களை சார்ந்த 143 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் ஊராட்சிகளில் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்களின் குடும்பங்களைச் சார்ந்தவர்களால் நடத்தப்பட்டு கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட ஊரக தொழில்களை மேம்படுத்துவதற்காகவும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்கள் மேற்கொள்ளப்படும் வாழ்வாதார தொழிலை செயல்படுத்துவதற்காகவும், உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் தொழில் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்புகளில் (குழு) உள்ள உறுப்பினர்கள் தங்கள் தொழில்களின் மூலம் வளமும் வலிமையும் பெறுவதற்காகவும், பிற பகுதிகளுக்கு புலம்பெயர்ந்து மீண்டும் சொந்த ஊர் திரும்பிய இளைஞர்களுக்கு புதிதாக தொழில் துவங்கிடவும், தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டத்தின் மூலம் ரூ.300 கோடியில் கொரோனா சிறப்பு நிதி உதவி தொகுப்பு திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வரால் 28.05.2020 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

இந்த சிறப்பு நிதி உதவி தொகுப்பின் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.10.90 கோடி மதிப்பில் 6254 பயனாளிகள் பயன்பெறக்கூடிய வகையில் கொரோனா சிறப்பு நிதி உதவி தொகுப்பு செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 2973 நபர்களுக்கு தனிநபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.50,000/- என்ற அடிப்படையில் ரூ.5.72 கோடி நீண்ட கால தனிநபர் தொழில் கடனாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் மூலமாக வழங்கப்பட்டுள்ளது. 56 உற்பத்தியாளர் குழுவில் உள்ள 2712 நபர்கள் பயன்பெறக்கூடிய வகையில் ஒருமுறை மூலதன மானியமாக குழு ஒன்றிற்கு ரூ.1.50 இலட்சம் வீதம் ரூ.84 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 17 தொழில் குழுக்களில் உள்ள 85 நபர்கள் பயன்பெறும் வகையில் ஒருமுறை மூலதன மானியமாக குழு ஒன்றிற்கு ரூ.1.50 இலட்சம் வீதம் ரூ.25.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு உற்பத்தியாளர் நிறுவனத்தில் உள்ள 1002 நபர்கள் பயன்பெறும் வகையில் மூலதன மானியமாக ரூ.10 இலட்சம் இரண்டு தவணையில் முதல் தவணையாக ரூ.7 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்து மீண்டும் சொந்த ஊர் திரும்பிய திறன் பெற்றவர்களின் வேலை இல்லாத இளைஞர்களுக்கு தொழில் துவங்குவதற்கு கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மூலமாக தலா ரூ.1 இலட்சம் வீதம் 220 இளைஞர்களுக்கு மொத்தம் ரூ.2.20 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள், விதவைகள், ஆதரவற்றோர், திருநங்கைகள், முதிர்கண்ணிகள் உள்ளிட்ட நலிவுற்றோர்களில் தொழில் மேம்பாட்டிற்காக நபர்களை தேர்ந்தெடுத்து தொழில் மூலதன நிதியாக கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலமாக தனிநபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.20,000/- என்ற அடிப்படையில் 1164 நபர்களுக்கு ரூ.1.78 கோடி வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், இத்திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உச்சிப்புளி கிராமத்தில் பாரம்பரிய நெல் மற்றும் சிறுதானிய உற்பத்தி செய்யும் முகவை பாரம்பரிய பயிர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு ரூ.7 இலட்சம் மதிப்பிலும், வாலாந்தரவை உழவர் ஆர்வலர் குழுவிற்கு ரூ.1.50 இலட்சம் மதிப்பிலும் தனிநபர் கடனுதவியாக 6 பயனாளிகளுக்கு தலா ரூ.1 இலட்சம் வீதம் 6 இலட்சம் மதிப்பிலும் என மொத்தம் ரூ.13.50 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்வின்போது, தமிழ்நாடு ஊரக திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.செந்தில்குமார் உடனிருந்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**